# ஸ்வாமி ஜ்யோதிர்மயானந்தாவின் சிறு கதைகள் -2

# Swami Jyothirmayananda's short stories -2

**1931 ஆம் ஆண்டு பீகார் மானிலத்தில் ஒரு ஆசாரமான குடும்பத்தில் பிறந்து, 1953 ஆம் ஆண்டில் சன்யாச தீட்சை பெற்றவர் ஸ்வாமி ஜ்யோதிர்மயானந்தா அவர்கள். அமெரிக்காவில் மியாமி என்ற மானிலத்தில் 1969 ஆம் ஆண்டு யோக ஆராய்ச்சி நிலையம் மற்றும் ஆசிரமம் ஒன்றை நிறுவி யோக வழி முறைகளைக் கற்றுக் கொடுக்கும் அவர் பல்வேறு புத்தகங்கள் எழுதி உள்ளார். அவர் எழுதிய சிறு கதைகள் மனதை சிந்திக்க வைப்பவை. அதில் ஒன்றுதான் கீழே உள்ள கதையும். அவர் கொடுத்துள்ள அனுமதியும் கீழே உள்ளது.**

Swami Jyotirmayananda was born in the year 1931 in Bihar to a noble and orthodox family and took to Sanya Diksha in the year 1953. He founded a Yoga research center and ashram in Miami, USA in the year 1969 and has been teaching the art of Yoga and its practices. Besides he has also authored several books. The short stories written by him are thought provoking. This bilingual story is one in them. The permission given by him is also reproduced below.

**Swamiji** <swamiji@bellsouth.net> Sun, 16 Jul, 2006 at 3:53 pm
To: nrj_1945@yahoo.com

N. R. Jayaraman

Blessed Self,
Adorations!

Your article was forwarded to me by Dr. Shashi B. Mishra.
I am pleased to see it.

You have my permission to publish translated versions (in Tamil))
of any article from my publications.

Dissemination of spiritual knowledge is the greatest
act of Divine Worship.

May God bless you with Success!

With regards Prem and Om,
Yours in the Lord
Swami Jyotirmayananda

# புதிய பார்வையில் மஹாபாரதம்

## மூலக் கட்டுரையை தமிழில் சுருக்கி

## எழுதியவர்: - சாந்திப்பிரியா



மகாபாரதப் போர் முடிந்து பதினைந்து ஆண்டுகள் ஆகி விட்டன. யுதிஷ்டிரர் இராஜபாலனத்தில் இருக்க திருதராஷ்டிரரும், காந்தாரியும் வனவாசம் மேற்கொண்டு எளிமையான வாழ்க்கையை வாழ்ந்தபடி இருக்க விரும்பினர். அதைக் கேள்விப்பட்ட அவருடைய பெற்றோருக்கு சமமான யுதிஷ்டிரர் வேதனைப்பட்டார். ஆனால் திருதராஷ்டிரரும் காந்தாரியும் அடைந்திருந்த வேதனைக்கு வடிகாலாக வேறு எதுவும் கூறத் தோன்றவில்லை. தமது நெருக்கமான நண்பர்கள், உறவினருடன் பயணத்திற்குத் தேவையான அனைத்து எற்பாடுகளையும் அவர்கள்

செய்து கொண்ட பொழுது அதற்கு குந்தி, விதுரர் மற்றும் சஞ்சயன் போன்றோர் பெரிதும் உதவியது மட்டும் இன்றி தாமும் அவர்களுடன் செல்ல முடிவு செய்தனர். அவர்களின் முடிவு மற்றவர்களுக்கு அதிர்ச்சியாக இருந்தும் அவர்களால் ஒன்றும் செய்ய முடியவில்லை.

ஒரு வருடம் கழிந்தது. பாண்டவர்களும் மற்ற மக்களும் கானகத்திற்குச் சென்று பெரியவர்களின் நலம் விஜாரித்து வந்தனர். அவர்களோடு சென்றிருந்த யுதிஷ்டர் அங்கிருந்த விதுரரைத் தேடினார். அனைவரையும் விட்டு விட்டு தனிமையில் எங்கோ அமர்ந்து கொண்டு தியானத்தில் இருந்த விதுரர் தம்மைத் தேடி யுதிஷ்டர் வருவதைக் கண்டு யோகப் பயிற்சியினால் சமாதி நிலை எடுத்துத் தன்னை மாய்த்துக் கொண்டார். அது மட்டும் அல்ல தன் உடலை விட்டு வெளியேறிய ஆத்மாவை யுதிஷ்டர் உடலுடன் கலந்து விட்டார். காரணம், இருவருமே தர்மராஜாவின் நியாயத்திற்கும் உண்மைக்கும் கட்டுப்பட்ட ஒரே ஜீவாத்மாக்களே என்பதை உலகம் அறிந்து கொள்ள வேண்டும் என விரும்பியதினால்தான்.

விதுரரின் மறைவிற்குப் பின்னர் திருதராஷ்டிரரிடம் வந்த வியாச முனிவர் அவருக்கு எதாவது ஆசை இருந்தால், அதை தம்மிடம் கூறினால் நிறைவேற்றித் தருவதாகக் கூற, தம் சொந்த பந்தங்களின் மறைவினால் மனம் வருத்தம் அடைந்திருந்த திருடராஷ்டிரர் அவர்களை ஒரு முறையாவது காட்ட முடியுமா எனக் கேட்டார். என்னதான் இருந்தாலும் இரத்த சம்மந்தம் அனைத்தையும் விட வலிவானது அல்லவா? அதை கேட்ட வியாச முனிவரும் மனம் மகிழ்ந்து, இரவு துவங்கியதும் யமுனை நதிக் கரையில் அனைவரும் வந்து கூடினால் மாண்டுபோன சொந்த பந்தங்களை அவர்களுக்குக் காட்டுவதாக உறுதி கூறிவிட்டுச் சென்றார்.

இரவும் வந்தது. திருதராஷ்டிரரும் மற்றவர்களும் யமுனை நதியின் கரைக்குச் செல்ல மரணம் அடைந்திருந்த அனைத்து உறவினர்களும் கடலில் இருந்து வெளி வந்தனர். அனைவரும் ஒருவரை ஒருவர்

அணைத்துக் கொண்டு மகிழ்சி பொங்க நடந்த அனைத்தையும் மறந்து, பகையையும் மறந்து, மனம் மறந்து பேசினர்.தமது சக்தியினால் திருதராஷ்டிரருக்கு அந்த நேரத்தில் கண் பார்வையையும் வியாசர் கொடுத்து இருந்தார். இரவு முடிந்து பகல் வெளியாகத் துவங்க, கடலினுள் இருந்து வெளி வந்த அனைவரும் மீண்டும் கடலுக்குள் சென்று மறைந்தனர். மற்ற அனைவரும் தத்தம் இடங்களுக்குத் திரும்பிச் சென்று விட்டனர். ஹஸ்தினாபுரத்தில் இருந்து காட்டிற்கு வந்து தங்கி இருந்த யுதிஷ்டரையும் மற்றவர்களையும் தத்தம் இடங்களுக்குச் சென்று விடுமாறும், அவர்கள் அங்கு இருப்பது தம்முடைய மன அமைதிக்கு இடைஞலாக இருப்பதாகவும் திருதராஷ்டிரர் கூற வேறு வழி தெரியாமல் யுதிஷ்டிரர் நாடு திரும்பினார்.

இரண்டு ஆண்டுகள் ஓடிவிட்டன. ஒரு நாள் நாரத முனிவர் சபைக்கு வந்து காட்டில் இறுதி நாட்களை அமைதியாகக் கழிக்க விரும்பிய திருதராஷ்டிரரும், மற்றவர்களும் காட்டில் தாமாகவே ஏற்படுத்திக் கொண்ட காட்டுத் தீயினால் மரணம் அடைந்து விட்டார்கள் என்ற செய்தியை கூறினார். அதனால் பெரும் மன வருத்தத்திற்கு ஆளான யுதிஷ்டர் சில நாட்களிலேயே தம் மன வருத்தத்தை குறைத்துக் கொண்டு மக்களின் சேவைக்கு தம்மை உட்படுத்திக் கொண்டு நல்லாட்சி செய்து வரலானார்.

இதன் தத்துவம் என்ன என்பதை ஸ்வாமி ஜோதிர்மயானந்தா அற்புதமாக விளக்கிக் கூறுகின்றார். வியாச முனிவர் இறந்து போன மக்களை உயிருடன் எழுந்து வரச் சொல்லி திருதராஷ்டிரருக்குக் காட்டியது ஒரு மாயை. அவரவர் பிறக்கும்போதே அவர்கள் என்ன நாடக பாத்திரத்தை அரங்கேற்ற வேண்டும் என மேலுலகில் இருந்து கூறப்பட்டு அனுப்பப்படுகின்றனர். அந்த பாத்திரங்கள் அவரவர் கர்ம வினைக்கேற்ப தரப்பட்டன. ஆத்மாவிற்கு தான் யார் என்பது தெரியாது. தமக்கு இடப்பட்ட கட்டளையை மட்டுமே ஒருவர் உடலில் புகுந்து கொண்டு அவை

நிறைவேற்றும். தனக்கென்ற தனி வழிமுறை அவற்றுக்கு கிடையாது. அவற்றுக்கு விருப்பும் இல்லை, வெறுப்பும் இல்லை. இந்த உண்மைகளை மனித குலத்திற்கு எடுத்துக் காட்டவே அந்த காட்சிகள் மகாபாரதம் என்ற மாயை கதையில் தரப்பட்டு உள்ளன. இல்லை எனில் இறந்து போன முன்னோர்களைக் காண வேண்டும் என்ற நினைப்பு ஏன் மற்றவர்களுக்கு வரவேண்டும்? வியாசர் நடத்திய தற்காலிக நாடகத்தில் இருதரப்பு எதிரிகளும் எதிரெதிரே தோன்றியும் அங்கு இயற்கையாக எழும்பும் விருப்பு, வெறுப்பு மற்றும் பகை உணர்ச்சிகள் தோன்றாதது ஏன்? மஹாபாரதம் என்ற கதை மூலம் ஒரு நன்னெறி நாடகத்தை உலகிற்கு காட்ட வேண்டும் என்ற எண்ணத்திலே நடத்தப்பட்டதே அது என்பதே அதன் காரணம்.

இன்னொரு கதை மூலம் ஜோதிர்மயானந்தா இன்னொரு செய்தியை தருகின்றார். அந்தக் கதை இது. மகாபாரத யுத்தம் முடிந்து 36 ஆண்டுகள் கழிந்தன. யுதிஷ்டிரர் ஹஸ்தினாபுரத்தை ஆண்டு வந்த வேளையில் பகவான் கிருஷ்ணர் துவாரகையை ஆண்டு வந்தார். நாட்டில் இருந்த அசுரர்களை அழிக்கவே தெய்வப் பிறவியை மறைத்துக் கொண்டு மனித உருவில் வந்தவர் யாதவ குலத்தை சார்ந்தவர் அல்லவா? யாதவ குலம் அழியட்டும் என ஒரு முறை காந்தாரி சாபமிட்ட காலம் கட்டம் நிறைவேற்றப்படும் தருணம் தோன்றியது. அதற்கேற்ப மூன்று மாபெரும் மனிவர்கள் துவாரகைக்கு வந்தனர். நாட்டில் வந்த அந்த மூன்று முனிவர்களையும் அதிகார மமதையில் இருந்த யாதவ மக்கள் கேலி செய்யத் துவங்கினர். அவர்களுடைய சக்தியை சோதிக்க விரும்பிய யாதவர்கள் சிலர் ஒரு கர்பிணிப் பெண் போல் வேடம் அணிந்து கொண்டு, உலக்கையை வயிற்றில் கட்டிக் கொண்டு, அந்த கர்பிணிக்குப் பிறக்கப் போகும் குழந்தை ஆணா அல்லது பெண்ணா என முனிவர்களிடம் கேட்டனர். அவர்களது கலியை பொறுத்துக் கொள்ள முடியாமல் போன முனிவர்கள் அந்த கர்பிணி ஒரு உலக்கையை பெற்று எடுப்பாள் எனவும் அதன் மூலமே அவர்களுக்கு மரணம் சம்பவிக்கும் எனவும் சாபமிட்டனர்.

அடுத்தக் கணம் அந்த கர்பிணிப் பெண் உருவில் இருந்த ஆணின் உடலில் இருந்து பெரிய உலக்கை வெளியில் வந்து விழுந்தது. அதைக் கண்டு பீதியுற்ற யாதவர்கள் அந்த உலக்கையை பொடிப் பொடியாக்கி கடலில் கரைத்து விட்டனர். ஆனால் தமக்கு வர இருக்கும் ஆபத்தை அவர்கள் அப்போது உணரவில்லை.

கடலில் கரைந்து விடட்டும் என எண்ணி உலக்கையின் பொடியை அந்த கடலில் போட்டாலும் அந்த இரும்புப் பொடிகள் கடல் அலைகளினால் தள்ளப்பட்டு கரையில் இருந்த காட்டில் சென்று அங்கிருந்த காட்டு மணலில் புதைந்தன. அவை புதைந்த இடத்தில் தோன்றிய செடிகள் அந்த இரும்புத் துண்டுகளின் சக்தியினால் பிரும்மாண்ட இலைகளைக் கொண்ட காட்டுச் செடிகளாயின. அவற்றின் இலைகள் கூர்மையாக கத்திபோல அமைந்தன. காலமும் நகர்ந்தது. தீமைகள் பெருகத் துவங்கின. அதைக் கண்டு மனம் வேதனை அடைந்த பகவான் கிருஷ்ணர் அனைத்து யாதவர்களையும் அழைத்துக் கொண்டு அந்த இராட்சச இலை மரங்கள் அடரந்த பிபாரக்ஷேத்திரா என்ற இடத்திற்கு புனித யாத்திரையை மேற்கொண்டார். அங்கு சென்ற யாதவர்கள் அனைவரும் குடித்துவிட்டு கும்மாளம் போட்டபடி இருந்தபோது, இரண்டு யாதவ பிரிவினரிடையே எற்பட்ட சிறிய பிரச்சனை பெரியதாக மாறி ஒருவருக்கொருவர் கையில் கிடைத்தவற்றைக் கொண்டு தாக்கிக் கொண்டனர். காட்டில் இருந்த இராட்சச இலைகளைப் பறித்து ஒருவருக்கொருவர் தாக்கிக் கொண்டு அதனால் உடல் வெட்டுப்பட்டு அனைவரும் இறந்தனர். அதைக் கண்டு மனம் கலங்கிய பகவான் பலராமர் தனிமையான ஒரு இடத்திற்குச் சென்று அமர்ந்து கொண்டு தவ வலிமையினால் தன்னை மாய்த்துக் கொள்ள அவர் தலையில் இருந்த ஆயிரம் தலைகளைக் கொண்ட அற்புதமான நாகம் வானில் சென்று மறைந்தது.

அவர் மரணம் அடையும் முன் மற்றும் ஒரு நிகழ்ச்சி நடந்தது. தனக்கு முடிவு காலம் நெருங்கியதை உணர்ந்த பகவான் கிருஷ்ணர் தன்னுடைய

தந்தை வாசுதேவரிடம் விடை பெற்றுக் கொண்டு அமைதியாக காட்டிற்குச் சென்றார். அதற்கு பல ஆண்டுகளுக்கு முன்பாக துர்வாச முனிவர் துவாரகைக்குச் சென்றிருந்த பொழுது வேண்டும் என்றே பகவான் கிருஷ்ணரிடம் மோசமாக நடந்து கொண்டார். ஆனால் பகவான் கிருஷ்ணர் அசாதரணமான பொறுமையைக் காட்டினார். முடிவாக அங்கிருந்து கிளம்பிய துர்வாசர் தம் உடலின் அனைத்துப் பகுதியிலும் அரிசி மாவைத் தடவுமாறு பகவான் கிருஷ்ணரிடம் கூறினார். அவரும் அவர் உடம்பு முழுவதும் அரிசி மாவைத் தடவினாலும், பாதத்தில் மட்டும் தடவாமல் விட்டுவிட்டார். அந்த தவறை சுட்டிக் காட்டிய துர்வாசர், பகவான் கிருஷ்ணருடைய மரணம் அவருடைய பாதத்தின் மூலமே நடைபெறும் என சாபமிட்டுச் சென்றார். அந்த வேளை வந்த நேரத்தில்தான் பகவான் கிருஷ்ணர் காட்டிற்குச் சென்று தனி இடத்தில் அமர்ந்து கொண்டு தம் இறுதி முடிவை எதிர் நோக்கி காத்திருந்தபடி உறங்கலானார். சந்திர கிரணங்கள் அவர் பாதத்தில் விழுந்து பளபளக்க, தூரத்தில் வேட்டையாடிக் கொண்டு இருந்த ஒரு வேடன் கண்களுக்கு அந்த கால்கள் ஒரு மான் போல தோன்ற, அதன் மீது அம்பு எய்ய, பகவான் கிருஷ்ணரின் மரணம் துர்வாச முனிவரின் சாபம் மூலம் முடிவுக்கு வந்தது.

அந்த செய்தியைக் கேள்விப்பட்ட அர்ஜூனன் பதறிப் போய் துவாரகைக்குச் சென்று வாசுதேவரிடம் கூற, அமைதியாக அவனிடம் ஒரு செய்தியை கூறினார். பகவான் கிருஷ்ணர் தானும் அர்ஜூனனும் ஒன்றே எனவும், தன் மரணத்திற்குப் பிறகு தன்னுடைய மனைவி மக்களை அழைத்துக் கொண்டு ஹஸ்தினாபுரத்திற்குச் சென்று விடுமாறு அர்ஜூனனிடம் கூறுமாறு தம்மிடம் பகவான் கிருஷ்ணர் கூறி இருந்த உண்மையை அர்ஜூனிடம்; கூறினார். அதன் பின் அவர் தன்னுடைய மனைவி மக்களுடன் தியானத்தில் அமர்ந்து கொண்டு தற்கொலை செய்து கொண்டுவிட, துயரமுற்ற அர்ஜுனனும் மீதமிருந்த யாதவ குல மக்களுடன் ஹஸ்தினாபுரத்திற்குச் செல்கையில் வழியில்

திருடர்களாலும் கொள்ளைக்காரர்களினாலும் தாக்கப்பட்டு, அவர்கள் கொள்ளை அடித்தது போதாது என  யாதவப் பெண்களையும் தூக்கிக் கொண்டு போக, மிஞ்சிய மக்களுடன் நாடு திரும்பினான். பகவான் கிருஷ்ணரின் மிஞ்சிய மனைவிகள் தாமே தமக்கு தீ மூட்டிக்கொண்டு உயிர் இழக்க பகவான் கிருஷ்ணருடைய யாதவ குலம் முதலிலுமாக அழிந்தது.

இதன் தத்துவம் என்ன என்பதை ஜோதிர்மயாநந்தா அற்புதமாக விளக்கிக் கூறுகின்றார். 'நன்னெறி வாழ்வை உலகிற்கு காட்ட வேண்டும் என்ற எண்ணத்திலே நடத்தப்பட்டதே அந்த நாடகம். பகவான் பரசுராமர் தலையில் இருந்த ஆயிரம் தலைகளைக் கொண்ட அற்புதமான தெய்வ நாகம் வானில் சென்று மறைந்தது என்ற காட்சி காட்டுவது என்ன எனில் பகவான் மகாவிஷ்ணு அந்த நாடகத்தில் தம் பங்கை நிறைவேற்றவே தம்முடைய தெய்வீக வாகனமான சேஷநாகத்தை பகவான் பலராமர் உருவில் அனுப்பி அந்த நாடகம் முடிந்தவுடன் அதை திரும்ப அழைத்துக் கொண்டார் என்பதைக் காட்டுகின்றது.  இப்படி நடைபெற்ற நாடகங்களில் பங்கேற்க வரும் அசுரர்களும், தேவர்களும், கடவுட்களும் தத்தம் நாடக பாத்திரங்களை நடத்தி முடித்துக் கொண்ட பின் மீண்டும் அடுத்த கட்ட நாடகத்தில் பங்கேற்கும்வரை மேலுலகம் சென்று அங்கு உலவுகின்றனர் என நம்புவோம்.

# Mahabharatha- New Look

## Translation of above Tamil version into English

## by Santhipriya



Fifteen years elapsed after Mahabharata war ended and Yudhishthira took over the reins of power. Dhirudharashtra and Gandhari decided to leave the Kingdom and lead a simple life in exile somewhere. On hearing their decision, Yudhishthira felt terribly upset but he could offer not offer any other solution to heel their wounded feelings. When Dhirudharashtra and Gandhari got ready to go into the forest, their close friends, relatives, Kunti,

Vithura and Sanjaya who too decided to go along with them which left the Pandavas remain in state of shock.

One year passed. The other folks visited the forest to find out the welfare of the elders. Yudhishthira, who too accompanied them went in search of his uncle Vithura who was in solitude and meditating. When Vithura saw with his yogic powers Yudhishthira coming to meet him, he immediately went into the state of self-samadhi and killed himself, but at the same time Vithura ensured that his soul merged with the soul of Yudhishthira, reason being Vithura wanted to let the universe know that both were true adherents to the laws and rules of justice of Lord Dharmaraja (Lord Yama).

After the demise of Vithura, Maharishi Vysa met Dhirudharashtra, to find out whether he needed any help from him. Depressed Dhirudharashtra wanted to know from the Maharishi, whether he could arrange for a meeting with his family members and close relatives who had perished in the war. Maharishi Vyasa promised to get his wishes fulfilled and asked Dhirudharashtra to come to the seashore in the mid of night when he would make necessary arrange for their meeting.

As directed by the Maharishi, as soon as Dhirudharashtra descended on the bank of the seashore along with his relatives, all those close relatives who had demised slowly came out from inside the sea and met those waiting on seashore. The brethren's hugged each other in elated joy and pushing aside their enmity everyone remained in high state of happiness talking about their

welfare. Maharishi Vyasa with his power ensured of Dhirudharashtra was able to see everyone by regaining the lost power of sight in those moment of joyous reunion. Time ticked and when it began to dawn those who had come from inside the sea went back and disappeared, while those on the seashore began to retreat. Once everyone reached the forest after meeting their relatives Dhirudharashtra requested everyone including Yudhishthira to return back to Hasthinapura as their stay was mentally disturbing them.

Two years passed, and one day Maharishi Narad Muni went to Yudhishthira to inform Dhirudharashtra and others that in self-created forest fire every one of their relatives in exile perished by remaining inside. Though Yudhishthira was inconsolable for some time, he reconciled himself to the reality and began to concentrate in the affairs of good governance and passed his time.

Jyotirmayananda explains wonderfully what the philosophy is behind the above story. Vyasa Sage told the Dhirudharashtra that it was mere illusion in which he met his relatives who had perished in the war. Though according to the Karma their life had ended, indeed they were only actors on the drama enacted by the Lord of divine. None of the souls know who they were and they enter into the body of one on command by their creator. The souls have no independent movements of feelings of their own, nor do they know what the joy, hatred or the sorrow were and they were far away from attachments. The scenes from the story of the Mahabharata has been shown only to show to the mankind the facts of illusion. If it was true that the souls had their own

independent feelings, there would have been feelings of hatred and anguish expressed in their meeting, but nothing of such sort happened which shows that the souls were mere players in the game of the Lord.

Swami Jyotirmayananda has illustrated the divine drama through another story, which involve Lord Krishna. Thirty five years elapsed after Mahabharata war ended, and Yudhishthira had taken over the reins of power in Hasthinapura while Lord Krishna returned back to Dwaraka and took over the reins of power there. Concealing his divine identity, Lord Krishna manifested in human form in the clan of Yadav to destroy the evil forces. As time passed, the destined time to destroy the Yadav clan arose because of the curse of Gandhari. Accordingly when three great sages visited Dwaraka, they were mocked by the Yadav folks in arrogance of power. In order to test the powers of the saints, few Yadav folks went to the sages, one of them dressed up like a pregnant woman by concealing a pestle in his stomach and asked to saints to forecast whether he would deliver a male or female child. Angered by the insult, the sages cursed that the Yadav clan would get destroyed by a pestle. The moment they cursed, the pestle fell from the body of the fake pregnant lady dressed Yadav. Afraid of the curse, the Yadavs broke and powdered the pestle and mixed it into the sea water unware of the impending danger that staired at them out of the curse.

Though the dust of the pestle was thrown into the sea thinking that it would get dissolved, the iron dust was pushed by the waves of sea on to the sea shore and buried in the wild sand of the nearby forest there. In few years

from then plants spouted from the pestle dust buried seashore, and turned into wild plants with huge sharp edged leaves like knives by the inherent magnetic power of the iron dust buried there. Time moved on, and evil forces began to raise their ugly heads of the tentacles widely across Dwaraka. Heartbroken Lord Krishna realized the time had come to destroy the Yadav clan. He took the mighty Yadav's to the site of Piparashethra where those mighty plants had grown in plenty and camped there in the name of pilgrimage. The Yadavs drank and dined with no holds barred which led to the unholy acts culminating into factional fight amongst them. The warring groups took whatever they could get including the wild leaves and attacked each other. The wild leaves, almost like a sword, inflicted severe injuries and everyone severely injured with several objects and leaves lay dead ultimately. None survived. Lord Balarama saddened by the sight went and sat in an isolated place and caused death by himself with his yogic powers, when a thousand hooded snake flew away into the air from his head and disappeared.

Before Lord Balarama ended his incarnation one other event happened. Lord Krishna bade goodbye to his father Vasudeva and proceeded to the forest to end his incarnation as per the curse carried by him long before. Once Sage Durvasa went to meet Lord Krishna and deliberately misbehaved with him even though Lord Krishna absorbed it in silence with greatest patience. There was a reason for it. Sage Durvasa asked Lord Krishna to apply rice power over his entire body as if it was part of a ritual to be done and while the Lord applied rice powder over the body of the sage, he deliberately left out the

foot portion of the sage. The sage got annoyed and cursed that the Lord would meet his end through his foot only and went away. When the time ripened to end his incarnation, Lord Krishna chose to go to the forest. He went and sat in a secluded place and deliberately slept when the lunar rays fell on the back side of his foot causing a shadow to appear as if it was a Deer. Misconstruing it to be a Deer, a hunter fired an arrow from a long distance, which intruded into the foot of the Lord thereby causing death to his human body, ending his incarnation and also the curse.

Upon hearing the sad news, Arjuna rushed to Dwaraka to convey the news to Vasudeva who quietly revealed a secret held by him so far. He revealed to Arjuna that Lord Krishna had secretly told him that both he and Arjuna were one and the same, but in two different forms and once the body of Lord Krishna meet death, then immediately Arjuna should safely move out the entire family of Lord Krishna to Hasthinapura. After conveying the facts, Vasudeva committed suicide with his family. As Arjuna began the journey to Hasthinapura along with family members of Lord Krishna, on way he was attacked by thieves and robbers, who looted away their belongings besides kidnapping several females of the family of Lord Krishna. The remaining wives of Lord Krishna committed suicide.

Swami Jyotirmayananda explains beautifully the philosophy behind this. Swamiji says that the play was staged by divine with the sole intention of showing morality to be maintained in life. By showing the thousand-headed serpent flying away from the head of Lord Balarama it was revealed to the

world that Lord Mahavishnu sent his divine vehicle career Shesha nag in the form of Lord Balarama to fulfill his obligations to destroy the evil forces. Thus when his role in the divine drama ended on earth, the actors involved in it went back as destined to them and waited for the next drama to be staged.